BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893

An international open access, peer- reviewed, refereed journal

# கணவனை இழந்த மகளிரின் அவல நிலை: புறப்பொருள் வெண்பாமாலை - கலிங்கத்துப் பரணி ஒப்பீட்டு நோக்கு

முனைவர் சு. பிரபாவதி

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கொ. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர் -607001.

அலைபேசி- 8680826003 மின்னஞ்சல்: dr.prabatamil@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர் வாழ்வியலில் போரும் வீரமும் முதன்மைப் பாடுபொருள்களாகத் திகழ்ந்தபோதிலும், போரின் மறுபக்கமாக விளங்கும் பெண்களின் அவல நிலையையும் தமிழ் இலக்கியங்கள் மிக ஆழமாகப் பதிவு செய்துள்ளன. இவ்வாய்வுக் கட்டுரை, பழந்தமிழ் புறவிலக்கண நூலான 'புறப்பொருள் வெண்பாமாலை' பொதுவியல் திணையில் வகுத்துள்ள துறைகளின் அடிப்படையில், பன்னிரண்டாம் நூற்றாண்டுச் சிற்றிலக்கியமான 'கலிங்கத்துப் பரணி' காட்டும் போர்க்கால மகளிரின் அவல நிலையை ஒப்பீட்டு நோக்கில் ஆராய்கிறது. போரினால் ஒரே நாளில் கணவனை இழந்து கைம்பெண்களாக மாறும் கலிங்க நாட்டுப் பெண்களின் பரிதவிப்பு, போர்க்களத்தில் கணவனின் உடலைத் தேடி அலையும் அவலம், உடன்கட்டை ஏறும் (சதி) சமூகக் கட்டமைப்பு மற்றும் வீரசுவர்க்கக் கோட்பாட்டோடு இணையும் பெண்களின் மரணம் ஆகியன இதில் விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. புறப்பொருள் வெண்பாமாலை காட்டும் தாபத நிலை, ஆனந்தப் பையுள், மூதானந்தம், மாலை நிலை, முதுபாலை போன்ற துறைகளின் கோட்பாட்டு நீட்சியாகக் கலிங்கத்துப் பரணியின் போர்க்களக் காட்சிகள் எவ்வாறு இரத்தமும் சதையுமாய் அமைந்துள்ளன என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. ஆட்சியாளர்களின் ஆசை எளிய சமூகப் பெண்களின் வாழ்வில் எத்தகைய இருளைக் கொண்டுவருகிறது என்பதைச் சமூகவியல் மற்றும் பனுவல்சார் நோக்கில் விளக்குவதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்(Keywords)**: புறப்பொருள் வெண்பாமாலை, கலிங்கத்துப் பரணி, கைம்மை நோன்பு, உடன்கட்டை ஏறுதல் (சதி), போர்க்கால அவலம், மூதானந்தம், மாலை நிலை.

**முன்னுரை**

தமிழர் வாழ்வியலில் போரும் வீரமும் இரண்டறக் கலந்தவை. போர்க்களத்தில் ஆண்கள் காட்டும் வீரத்தைப் பாடுவது ஒருபுறமிருக்க, போரின் விளைவால் பெண்கள் எதிர்கொள்ளும் துயரத்தையும், கணவனை இழந்த மகளிரின் அவல நிலையையும் தமிழ் இலக்கியங்கள் மிக ஆழமாகப் பதிவு செய்துள்ளன. இலக்கண நூலான புறப்பொருள் வெண்பாமாலை போர்க்காலப் பெண்களின் நிலையைத் 'துறைகளாக' வகுத்துக் கூற, பிற்காலத்துச் சிற்றிலக்கியமான கலிங்கத்துப் பரணி அதனைப் போர்க்களக் காட்சிகளாகக் கண்முன்னே நிறுத்துகிறது. கலிங்கத்துப் பரணி சோழரின் வெற்றிக் காவியமாக இருந்தாலும், அதில் கலிங்க நாட்டுப் பெண்களின் அவலக் குரல் வழியே வெளிப்படுவதைக் காணமுடிகிறது. புறப்பொருள் வெண்பாமாலையின் அடிப்படையில் கணவனை இழந்த பெண்களின் நிலையைக் கலிங்கத்துப் பரணியைச் சான்று காட்டி விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

பழந்தமிழ்ச் சமூகத்தில் புற ஒழுக்கத்தில் கணவனை இழந்த மனைவியின் நிலையையும் மனைவியை இழந்த கணவனின் நிலையினையும் புறப்பொருள் வெண்பாமாலை பொதுவியல் திணையில் “சிறப்பிற் பொதுவிற்பால” என்ற பகுதியில் தொகுத்துக் கூறுகிறது. அதில் குறிப்பிட்டுள்ள துறைகளை அடிப்படையாகக் கொண்டு கலிங்கத்துப் பரணியை ஆராய்ந்தால், புற இலக்கியத்திற்கான இலக்கணக் கோட்பாட்டின் அடிப்படையில் கலிங்கத்துப் பரணி பாடப்பட்டிருப்பது வெளிப்படை. இருப்பினும் சில மாற்றங்களையும் இதில் காணமுடிகின்றது. மேலும், அக்காலச் சமூகப் பண்பாட்டு மதிப்பீடுகளையும் கலிங்கத்துப் பரணி வெளிப்படுத்தியுள்ளது.

**போரும் கைம்மை நிலையும்**

கணவனை இழந்த பெண்களுக்கு இரண்டு வாய்ப்புகள் மட்டுமே இருந்தன. ஒன்று கணவன் இறந்த பின்பு அவன் நினைவுகளை மட்டும் மனதில் சுமந்துகொண்டு விருப்பு வெறுப்பின்றி சமூகம் விதித்துள்ள விதிமுறைகளைக் கடைப்பிடித்து வாழும் வாழ்க்கை. இதனைக் கைம்மை நோன்பு என்பர். இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும் ‘தாபத நிலை’ என்னும் துறைக்குள் அடக்கலாம்.

*"குருந்தலர் கண்ணிக் கொழுநன் மாய்ந்தெனக்*
*கருந்தடங் கண்ணி கைம்மை கூறின்று"*
*(பு.வெ.- தாபத நிலை )*

அன்பிற்குரிய கணவனை இழந்த, அழகிய கற்பு நெறியினைக் கொண்ட மனைவி, தன் எஞ்சிய வாழ்நாளில் அணிகலன்களைத் துறந்து, உலக இன்பங்களை வெறுத்து, கடுமையான கைம்மை நோன்பு (தவம்) நோற்ப சிறப்பினை எடுத்துரைப்பது **தாபத நிலை** ஆகும். இதுபோல், புறப்பொருள் வெண்பாமாலை காட்டும் 'ஆனந்தப் பையுள்', 'மூதானந்தம்', ‘முதுபாலை’, ‘மாலை நிலை’, ‘கையறுநிலை’ போன்ற துறைகளும் கணவனை இழந்த பெண்களின் நிலையை விளக்குகின்றன.

அடுத்தது, கணவன் இறந்த பின்பு கடைப்பிடிக்க வேண்டிய இந்தக் கைம்மை நோன்பிற்கு அஞ்சியும், தான் கற்புடையவள் என்பதை நிரூபிப்பதற்காகவும், கணவன் மீது கொண்ட அதீத அன்பின் காரணமாகவும் கணவனை எரிக்கும் ஈமத்தீயில் தானும் வீழ்ந்து மடிவது. இந்த இரண்டு நிலைகளில் கலிங்கத்துப் பரணி கணவன் இறந்துவிட்டான் என்பதை அறிந்து அவனோடு உயிர்த்துறக்கும் மனநிலை கொண்ட பெண்களையே கலிங்கத்துப் பரணி காட்டுகிறது.

**ஆனந்தப் பையுள்**

கலிங்கப் போரின் மூலம் ஒரே நாளில் ஆயிரக்கணக்கான கலிங்கப் பெண்கள் கைம்பெண்களாக மாறினர். சயங்கொண்டார் வாழ்ந்த பன்னிரண்டாம் நூற்றாண்டுச் சோழர் காலத்தில், கைம்மை நோன்புகளும், உடன்கட்டை ஏறும் (சதி) வழக்கமும் சமுதாயத்தில் ஆழமாக வேரூன்றியிருந்தன. இதன் எதிரொலியைக் கலிங்கத்துப் பரணியின் போர்க்களக் காட்சிகளில் துல்லியமாகக் காண முடிகிறது.

*“விழுமங் கூர வேய்த்தோள் அரிவை*
*கொழுநன் வீயக் குழைந்துயங்கின்று”*
*(பு.வெ. ஆனந்தப் பையுள்)*

மூங்கிலைப் போன்ற தேளினை உடையாள் தன் கணவன் போரில் இறந்துபட அதனால் இடும்பை மிகுந்தாளாகி மெலிந்து வருந்தும் நிலையினை ஆனந்தப் பையுள் என்று புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகிறது. இது கணவனை இழந்த பின் நோன்பு நோற்று வருந்தி உடல் மெலியும் நிலையை எடுத்துக் காட்டுகிறது. கலிங்கத்துப் பரணி போர்க்களத்தில் நிகழும் காட்சிகளை விவரிப்பதால் இந்நிலை அதில் இடம்பெறவில்லை.

**கணவனின் உடலைத் தேடியலைதல்**

தன் தலைவன் (கணவன்) இறந்துபட்ட காரணத்தினால், அவனது பிரிவைத் தாங்க மாட்டாமல் அவனுடைய மனைவி அளவிறந்த பெருந்துன்பத்தை அடைந்து அழுது புலம்புவதையும் அவளுடைய கணவனின் உடலைக் காணத் துடிக்கும் பரிதவிப்பையும் கண்முன் காட்சிப் படுத்துகிறார் செயங்கொண்டார்.




போர் முடிந்து களம் பாடும் பகுதியில், கலிங்க நாட்டுப் பெண்கள் தங்கள் கணவன்மார்களின் உடல்களைத் தேடி அழுது புலம்பும் காட்சிகள் மனதைக் கலங்கச் செய்கின்றன. போர்க்களம் முழுவதும் கலிங்க வீரர்களின் உடல்கள் சிதைந்து, துண்டிக்கப்பட்டுக் கிடக்கின்றன. அங்குத் திரியும் பேய்களும், பருந்துகளும் அவ்வுடல்களைத் தின்னுகின்றன. இத்தகைய கொடூரமான சூழலில், கலிங்க நாட்டுப் பெண்கள் தங்கள் கணவன்மார்களின் உடல்களை அடையாளம் காண முடியாமல் தவிக்கின்றனர்.

*"தங்கணவ ருடன்றாமும் போக வென்றே*
*சாதகரைக் கேட்பாரே தடவிப் பார்ப்பார்*
*எங்கணவர் கிடந்தவிட மெங்கே யென்றென்*
*றிடாகினியைக் கேட்பாரைக் காண்மின் காண்மின்"*
*(கலிங்க. 481)*

என்று பேய்களிடம் அழுது புலம்பும் இக்காட்சியில், தம் கணவருடன் தாமும் மடிந்து போக வேண்டும் என்ற உறுதியுடன் போர்க்களத்திற்கு வந்த மகளிர், அங்குள்ள 'சாதகப் பறவைகளிடமும்', 'இடாகினி' எனப்படும் பேய்களிடமும், "எங்கள் கணவர் உடல் எங்கே கிடக்கிறது?" என்று அழுதுகொண்டே கேட்டுத் தேடித் தவிக்கின்றனர். பேரரசின் அரசியல் ஆசை, சாதாரணப் பெண்களைப் பேய்களிடம் கையேந்த வைக்கும் அவல நிலையை இப்பாடல் காட்டுகிறது.

**உடன்கட்டை ஏறுதல்**

சங்க காலத்தில் கைம்மை நோன்பின் கொடுமை தாங்காத சில பெண்கள், கணவனின் ஈமத்தீயிலேயே விழுந்து உயிர்விட்டனர். இதனைப் புறநானூறு பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு பாடல் வழி (புறம். 246) விரிவாகக் கூறுகிறது. இந்நிலையைத் தொல்காப்பியர் பாலை நிலை என்கிறார்.

*"நல்லோள் கணவனொடு நனியழற் புகீஇச்*
*சொல்லிடையிட்ட பாலை நிலையும்"*
*(புறத். சூ. 24)*

இதனை புறப்பொருள் வெண்பாமாலை,

*"கதிர்வேற் கணவனொடு கனையெரி முழுக*
*மதியோர் நுதலி மாலைநின் றன்று."*
*(பு.வெ.- மாலை நிலை)*

இறந்துபட்ட கதிர்த்த வேலினால் சிறந்த தன் கணவனொடு தானும் செறிந்த நெருப்பிடத்தே முழுகுதற்கு பிறையை ஒத்த நெற்றியை உடையவள், மாலைக் காலத்தே மனம் பொருந்தி நின்றது மாலை நிலை எனப்படும் என்கிறார். போர்க்களத்தில் கணவன் மாண்ட செய்தி கேட்டு, ஆற்றியிருக்க முடியாத மனைவி, அவனது ஈமத்தீயிலேயே (சுடுகாட்டுத் தீயில்) தானும் வீழ்ந்து மடிவதை “மாலை நிலை” என்னும் துறை குறிப்பிடுகிறது. பரணி இலக்கியங்களின் 'களம்பாடியது' பகுதியை வெறும் போர்க்கள வர்ணனையாகக் கருதாமல், போரினால் பாதிக்கப்படும் எளிய கைம்பெண்களின் சமூக அவல ஆவணமாகவும் திகழ்கிறது.

கலிங்கத்துப் பரணியில் உடன்கட்டை ஏறும் காட்சியை சற்று மாறுபட்ட கோணத்தில் காட்டுகிறார் செயங்கொண்டார். கணவன் இறந்தபின் மனைவியர் கனவனோடு உடன்கட்டை ஏறும் செயலை உவமையாகப் பாடியுள்ளார். இவ்வாறு கணவன் இல்லாத உலகில் வாழ விரும்பாத பழந்தமிழ் மகளிரின் மனநிலையை இப்பரணிப் பாடல்கள் பிரதிபலிக்கின்றன. இதனை,

*“சாய்ந்து விழும் கடகளிற்றினுடனே சாய்ந்து*
*தடங்குருதி மசைப் படியும் கொடிகள், தங்கள்*
*காந்தருடன் கனல் அமளி அதன்மேல் வைகும்*
*கற்புடை மாதரை ஒத்தல் காண்மின், காண்மின்”*
*(கலிங்க. 480)*

என்று போர்க்களக்காட்சியைக் கூளி காளியிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. வெட்டுப் பட்டு சரிந்து விழும் யானைகளுடன் கொடியும் ஆறாக ஓடும் அந்தக் குருதியில் வீழும் காட்சியை கணவருடன் நெருப்பிலே வீழ்ந்து உடன்கட்டை ஏறும் பெண்களைப் போன்று இருப்பதைப் பாருங்கள் என்று கூறுவதாகப் பாடியுள்ளார் செயங்கொண்டார்.




இப்பாடலில் கற்புடைய பெண்கள் என்றால் அவர்கள் கணவன் இறந்தபின் அவனோடு ஈமத்தீயில் விழுந்து உடன்கட்டை ஏறுவர் என்பதையும் வலியுறுத்துவதாக உள்ளது. ஒரு பெண் கற்புடையவளாக இருக்கவேண்டுமென்றால் அவள் உடன்கட்டை ஏறவேண்டும் என்ற சமூகக் கட்டுப்பாட்டை இப்பாடலில் தெளிவாக விளக்கியுள்ளார்.

**மூதானந்தம்**

வீரமரணம் அடைந்த தன் கணவனின் உடலைக் கண்ட மாத்திரத்திலேயே, அந்தப் பெருந்துயரம் தாங்காமல் மனைவியும் அதே இடத்தில் அவன் உடலைத் தழுவியவாறே தன் உயிரை விட்டுவிடுவாள்.

வாழும் போது மட்டுமல்ல இறப்பிலும் அவனுடன் இணைந்தே இறக்கும் அவளைப் பார்த்து பிறர் பேசுவது மூதானந்தம் ஆகும். இதனை,

*“கயலோர் கண்ணி கணவனொடு முடிய*
*வியனெறிச் செல்வோர் வியந்துரைத் தன்று”*
*(பு.வெ. மூதானந்தம்)*

என்று புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகிறது. கயலை ஒத்த கண்ணினை உடையாள், தன் கணவன் இறந்துபட அகன்ற வழியிடத்தே செல்வோர் அவளது கற்புச் செறிவினைக் கண்டு வியந்து சொல்லியது மூதானந்தம் ஆகும். இது நுட்பமாக ஆராயவேண்டிய பகுதி. கணவன் இறந்த உடனே மனைவியும் இறந்தாள் அவள் கற்புடையவளாக இருப்பாள் என்ற சமூக மதிப்பீடு அந்தக் காலத்தில் இருந்துள்ளது என்பதையும் இத்துறை நமக்கு விளக்குகிறது.

கலிங்கத்துப் பரணியில் நேரடியாக மூதானந்தம் துறையில் பாடல்கள் இடம்பெறவில்லை என்றாலும், கணவன் இறந்தவுடனே மனைவியும் இறக்கவேண்டும் என்று விரும்பியதையும்; அதற்காக முன்வைக்கும் காரணமும் சுவாரசியமானது.

பழந்தமிழ்க் கோட்பாட்டின்படி, போர்க்களத்தில் வீரமரணம் அடையும் வீரர்கள் நேராக வீரசுவர்க்கம் அடைவர்; அங்குத் தேவ மகளிர் (அரம்பையர்) அவர்களை உபசரிப்பர் என்பது நம்பிக்கை. தன் கணவனின் உடலைக் கண்டெடுத்த கலிங்கப் பெண் ஒருத்தி, அவனது உயிரைத் தேவ மகளிர் தழுவுவதற்கு முன்பாகத் தானும் உயிர்விடத் துணிகிறாள்.

*"தரைமகள்தன் கொழுநன்ற னுடலந் தன்னைத்*
*தாங்காமற் றன்னுடலாற் றாங்கி விண்ணாட்*
*டரமகளி ரவ்வுயிரைப் புணரா முன்னம்*
*ஆவியொக்க விடுவாளைக் காண்மின் காண்மின்"*
*(கலிங்க. 483)*

பூமித்தாய் தன் கணவனின் உடலைத் தொடுவதற்கு முன்பாக, அவனது உடலைத் தன் மடியில் தாங்கிக் கொள்கிறாள். விண்ணுலகத்து மகளிர் அவனது உயிரை அடைவதற்குள், தானும் உடனே அவனுடன் விண்ணகம் செல்லத் தன் ஆவியை (உயிரை) அந்த இடத்திலேயே விடுகிறாள். இது புறப்பொருள் வெண்பாமாலையின் மூதானந்தம் துறையிலிருந்து சற்று மாறுபட்டிருந்தாலும், கணவனை இழந்த பெண்கள் கணவனோடு தானும் இறக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை இது வெளிப்படுத்துகிறது.




**ஊடலும் கையறு நிலையும்**

ஒரு பெண் தன் கணவன் போர்க்களத்தில் இறந்து கிடப்பதைக் காண்கிறாள். அவனது முகம் கோபத்தால் வாய் மடித்துக் கிடக்கிறது. அதை அறியாத அவளது காதல் நெஞ்சம், அவன் தன் மீது ஏதோ கோபம் கொண்டு (ஊடல்) பேசுவதைத் தவிர்ப்பதாக எண்ணிப் புலம்புகிறாள்.

*"வாய்மடித்துக் கிடந்ததலை மகனை நோக்கி*
*மணியதரத் தேதேனும் வடுவுண் டாயோ*
*நீமடித்துக் கிடந்ததெனப் புலவி கூர்ந்து*
*நின்றாவி சோர்வாளைக் காண்மின் காண்மின்"*
*(கலிங்க. 482)*

"உன் அழகிய உதட்டில் ஏதேனும் காயம் பட்டதோ? என்னிடம் கோபித்துக்கொண்டுதான் இப்படி வாய் மடித்துப் படுத்துக் கிடக்கிறாயா?" என்று புலம்பிக் கொண்டே, அந்தப் பெருந்துயரம் தாளாமல் அவளது உயிரும் அங்கேயே பிரிகிறது.

**முதுபாலை**

கணவனுடன் பாலை வழிச்செல்கின்ற போதோ அல்லது காட்டில் வாழும் போதோ, கணவன் திடீரென இறந்துவிட, அந்த அடர்ந்த காட்டில் (பாலை நிலத்தில்) துணையேதும் இன்றித் தனியாக எஞ்சிய மனைவி, திக்கற்றுப் போய் நெஞ்சம் கலங்கித் தவிக்கும் சோக நிலையை உரைப்பது **முதுபாலை** ஆகும். இதனை,

*“நனிமிகு சுரத்திடை கணவனை இழந்து*
*தனிமகள் புலம்பிய முதுபாலையும்”*
*(புறத். சூ. 24)*

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவார். இதனை,

*"காம்புயர் கடத்திடை கணவனை இழந்த*
*பூங்கொடி மடந்தை புலம்புரைத் தன்று."*
*(பு.வெ. – முதுபாலை)*

என்று புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகிறது.

இரண்டும் சுரமாகிய பாலை நிலத்தில் கணவனை இழந்து மனைவி புலம்பும் நிலையினைக் காட்சிப்படுத்துகிறது. கலிங்கத்துப் பரணியில் கலிங்க நாடு முழுவதும் போரினால் அழிகிறது. போர்க்களமே ஒரு பாலைநிலம் போலக் காட்சியளிக்கிறது. அங்குத் தன் கணவனை இழந்து, சுற்றத்தாரை இழந்து, பிணக்குவியல்களுக்கு இடையே தனியாக நின்று தவிக்கும் கலிங்கப் பெண்களின் நிலை 'முதுபாலை'யின் கொடூரத்தை நமக்கு உணர்த்துகிறது.

பேராசிரியர் சோ. ந. கந்தசாமி அவர்களின் இலக்கியக் கொள்கைப்படி, பழந்தமிழ் அறிவு மரபில் உருவான புறப்பொருள் இலக்கணத் துறைகளே பிற்காலச் சிற்றிலக்கிய வடிவங்களுக்குப் பனுவல்சார் அடிப்படைகளை வழங்கின. அவ்வகையில், புறப்பொருள் வெண்பாமாலை காட்டும் கையறுநிலை மற்றும் பொதுவியல் துறைகளின் உணர்வுப்பூர்வமான நீட்சியைச் சயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணிப் போர்க்கள வர்ணனைகளில் காண முடிகிறது.

**முடிவுரை**

புறப்பொருள் வெண்பாமாலை என்பது போரின் பல்வேறு நிலைகளுக்கு இலக்கணம் வகுத்த நூல். கலிங்கத்துப் பரணி என்பது அந்தப் போரினால் விளையும் பேரழிவைக் காட்டும் இலக்கியம். புறப்பொருள் வெண்பாமாலை 'இப்படி நடக்கும்' என்று கோட்பாடாகக் கூறியதை, சயங்கொண்டார் கலிங்கத்துப் போர்க்களத்தில் 'இப்படி நடந்தது' என்று கவித்துவத்தோடு சான்றுகாட்டியுள்ளார். சுருங்கக் கூறின், புறப்பொருள் வெண்பாமாலையின் சோகத் துறைகளுக்கு உயிர்நீர்க்காவியமாய், இரத்தமும் சதையுமாய் வடிவம் கொடுத்தது கலிங்கத்துப் பரணி எனலாம். போர் என்பது வீரத்தின் வெளிப்பாடாக இருந்தாலும், அது பெண்களின் வாழ்வில் எத்தகைய இருளைக் கொண்டு வருகிறது என்பதையும், கணவனை இழந்த பெண்களின் கையறு நிலையையும், கணவனை இழந்த பெண்களுக்கான சமூகக் கட்டமைப்புகளையும் செயங்கொண்டார் இந்தப் பாடல்களின் வழியே படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

**துணைநூல் பட்டியல்**


1. ஐயனாரிதனார். புலியூர் கேசிகன் உரை, *புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், ஆகஸ்டு 2009.
2. கந்தசாமி, சோ. ந. *தமிழ் இலக்கியக் கொள்கை (தொகுதி 1).* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2004.
3. சயங்கொண்டார். *கலிங்கத்துப் பரணி: மூலமும் தெளிவுரையும்(புலியூர்க் கேசிகன்).* பாரி நிலையம், 2014.
4. சுப்புரெட்டியார், ந. கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி, செல்வி பதிப்பகம், காரைக்குடி, மார்ச் 1957.
5. *புறநானூறு*, உ. வே. சாமிநாதையர் பதிப்பு, உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 2016.